சிறுவர் அமுதம்

19.04.95

கிண்ணம் 5 எண்ணம் 12

சிறுவர் இலக்கிய மாத வெளியீடு

Kinder freundliches Magazin

அன்புச் சிறுவர் சிறுமியரே!

சித்திரைப் புத்தாண்டு பிறந்து விட்டது. வருடங்கள் வருகின்றன. போகின்றன. ஒவ்வொருவரும் ஒரு வயது கூடுகிறது. ஒவ்வொருவர் வாழ்விலும் எத்தனை எத்தனை சுகங்கள், துக்கங்கள். சில வருடங்கள் மனத்திலே பதிந்து விடுகின்றன. சென்ற சித்திரைப் புத்தாண்டின் போது, உங்களுக்குத் தன் புத்தாண்டு வாழ்த்துக்களைச் சிறுவர் அமுதத்தின் மூலம் அறிவித்து விட்ட ஆசிரியர், காலமாகி ஓராண்டாகி விட்டது.

ஆனால் அவர் தொடக்கிச் சென்ற பணி மீண்டும் உங்களின் ஒத்துழைப்புடன் தொடர்ந்து தடைபில்லாமல் தொடர்கிறது. இனியும் தொடரும். மறைந்த ஆசியரின் வாழ்த்துக்களும் ஆசீர்களும்

அமுதத்திற்கும் அதன் ஆக்கதாரருக்குமே என்றைக்கும் கிடைக்கும் என்பதில் ஐயமில்லை.

அமுதம் மாமாவின் நினைவுப் போட்டிக்கு ஆக்கங்களை எழுதி அனுப்பிய உங்களுக்கும், எழுத ஊக்கமளித்த உங்கள் பெற்றோர்களுக்கும் சிறுவர் அமுதம் தன் நன்றியையும் அன்பையும் தெரிவித்துக் கொள்கிறது. ஆக்கங்கள் பரிசீலனைக்கு அனுப்பப்பட்டுள்ளன. ஆக்கங்களின் பரிசு விபரங்கள் வைகாசி இதழில் வெளிவரும்.

சிறுவர் அமுதத்தின் ஆக்கங்கள் தொடர்ந்து எழுதி வந்தவர்களுக்கும், எழுதுவோருக்கும், போட்டிகளில் பங்கு பற்றிய அனைவருக்கும் புது வருட வாழ்த்துகளையும், புது வருட அன்பளிப்பையும் வழங்குகிறது.

முந்திரிப் பருப்பை ஆங்கிலத்தில் "Cashewnut" என்று கூறுகின்றோம். இந்தப் பெயர் வந்தது ஒரு வேடிக்கையான கதை. வஸ்கொடகம்மா இந்தியாவுக்கு முதன்முதலாக கப்பலில் இருந்து இறங்கி வந்த போது, ஒரு பெண் முந்திரிப் பருப்பு விற்றுக் கொண்டிருந்தாள். முந்திரிப் பருப்பை அதற்கு முன் கணாத வஸ்கொடகம்மா அதன் பெயர் என்ன என்று அவாது மொழியில் கேட்டார். அவர் வியைலைத்தான் கேட்கிறார் என நினைத்த அப்பெணர் காசினு எட்டு எனப் பதிலளித்தாள். காசிற்கு (ஒரு சதத்திற்கு) எட்டு முந்திரியப் பருப்புக்கள் என்பதே அதன் பொருள் மலையாளத்தில். இதையறியாத அவர் அதுதான் அதனது பெயர் என நினைத்தார். அதிலிருந்தே அதே அதன் பெயராகி விட்டது.

நினைவில் கொள்ளுவோம்

சிறுவர் அமுதம் தந்து – எங்கள்
சிந்தை கொண்டவர்
சிரித்துப் பேசி மனதில் என்றும்
இடம் பிடித்தவர்.

கதைகள் மூலம் அறிவைத் தந்து
கவர்ந்து நின்றவர்
எம்மை மறந்து விட்டு
விண்ணுலகம் பிரிந்து சென்றவர்.

சிந்தை தன்னில் – இன்று அவரை
நிறுத்திக் கொள்ளுவோம்
அவர் சொல்லிச் தந்த கருத்துக்களை
நினைவில் கொள்ளுவோம்

விருதுகளும் பாராட்டுக்களும் கிடைத்து விட்டதென்று பெருமை பட்டுக் கொள்ளாதீர்கள். அவை கிடைட்டிதற்கு நீங்கள் அருகதை உள்ளவர்கள் தானா என்று யோசித்துப் பாருங்கள்.

– அரிஸ்டாட்டில் –

சொற்களைக் கண்டு பிடியுங்கள்

ம	தி	ப்	பெ	ண்	க	வி	தை	ம	ம
ன்	றி	தி	த்	பு	ப்	த	ண்	ணீ	ர்
ன	ம	ச	ந்	தி	ப	வை	எ	வா	ழை
வ	ண	க்	க	ம்	ல்	ர	ழு	ன	பி
ன்	ம்	க	அ	ட	கா	ம்	த்	வி	டி
ர	த	ர	ம்	மா	ம	சி	து	ல்	நா
கா	ர	டி	மி	து	ழ்	பா	த்	ல	த
க்	வி	ம	ன	ம்	தா	ப்	ச	ன்	னி
கை	த	த	ஓ	ட்	ட	க	ம்	ம	ன்
பா	வை	ம்	லி	ச	தா	லி	கீ	வை	ல

முடிவு திகதி: 20.5.95

தூய்மை, பொறுமை, விடாமுயற்சி இவை மூன்றும்தான் ஒருவனின் வெற்றிக்குக் காரணமாகிறது.

–சுவாமி விவேகானந்தர்–

உஸ்.....ஸ்! அவனுக்குத் தெரியும்

ஒருவன் ஒன்றை ஒளித்துச் செய்வதை
அந்த ஒருவன் அறிவான்
இருவர் இணைந்து எதைச் செய்தாலும்
அந்த இறைவன் அறிவான்

பலபேர் சேர்ந்து பாதகம் செய்வதை
அந்தப் பரமன் அறிவான்
சிலபேர் செய்யும் சித்திரவதை
அதைச் சிவனும் அறிவான்

இறைவன் பரமன் இரண்டல்ல
புத்தன் அல்லா வேறல்ல
ஒருவன் என்றே உணர்ந்திடுவோம்
நன்மை என்றும் செய்திடுவோம்

– பாவை இரவீந்திரன் –

எகிப்தியர்கள் கண்களுக்குக் கீழேவரும் கருமையைப் போக்க எறும்புகளின் முட்டைகளைப் பயன்படுத்தினார்களாம். ரோமானியர்கள் சருமத்தை மிருதுவாக்கவும் பளபளப்பாகவும் வைத்துக் கொள்ள கழுதைப் பாலை உடம்பு முழுவதும் தடவிக் கொள்வார்களாம்.

தமிழ்ப்புத்தாண்டு

தமிழர் பண்டிகைகளுள் தமிழ்ப்புத்தாண்டு சிறந்த திருநாளாகும். தமிழர்களின் இல்லங்கள் தோறும் கொண்டாடப் படும் இப்பண்டிகை, இலங்கையில் சிங்களவரும் கொண்டாடப் படும் ஒரு பண்டிகையாகும். இத்தகைய கொண்டாட்டங்கள் ஒருவரோடு ஒருவர் கலந்து குலாவி மனித நேயத்தையும், மானுட ஒற்றுமையையும், வளர்த்துக் கொள்ள முயலும் ஓர் உயரிய நிகழ்ச்சியாகும்.

மழைகாலம் முடிவற்று வசந்தருதுவில் சித்திரை மாதம் முதல் தேதியில் தமிழ்ப் புத்தாண்டு பிறக்கிறது. இலையுதிர்காலம் முடிந்து, பட்ட மரங்களைப் போன்ற நிலையிலிருக்கும் மரங்களில் துளிர்விட்டு புதிய இலைகள் தோன்றி மரங்களில் மலர்கள் பூத்துச் சொரிய ஆரம்பிக்கும் காலமிது. வசந்தகாலம் இன்பத்தையும், இதமான தென்றல் காற்றையும் பட்சி ஜாலங்களின் மகிழ்ச்சி ஆரவாரக் குரல் இனிமையையும் அளிக்கும் பருவ காலம்.

புத்தாண்டு பிறக்கும் இந்நாளில் கோவிலில் இருந்து பெறப்பட்ட மருத்துநீரில் குளித்து நீராடி, புதிய ஆடைகளை அணிந்து ஆலயங்களுக்குச் சென்று ஆலய வழிபாடு செய்வது மிகச் சிறப்பாகும். பின்பு வீட்டில் பெரியவர்களிடமிருந்தோ அல்லது ஆலய

அர்ச்சகரிடமிருந்தோ புதுவருட கைவிசேடம் பெற்றுக் கொள்வது தொன்றுதொட்டு இருந்துவரும் ஒரு நம்பிக்கையாகும். இப் பண்டிகை தினத்தில் வீட்டில் விசேடமாகத் தயாரிக்கப்பட்ட சுவையிக்க இனிப்புப் பண்டங்களை உறவினர் நண்பர்களுடன் சேர்ந்து உண்டு களிப்பதும் நம் பண்பாடாக இருந்து வருகிறது.

புத்தாண்டு பிறக்கும் இப்புண்ணிய காலத்தில் ஒரு நல்ல காரியம் செய்தால் வருடம் முழுவதுமே அந்த நற்பணி தொடரும் என்பது ஐதீகம். தீய பழக்கங்களைக் கைவிட்டு நற் பழக்கங்களை மேற்கொள்ளும் வகையில் புத்தாண்டுத் தீர்மானங்களை நிறைவேற்றுவோம்.

–முகுந்தன் மகேந்திரன்–

வெற்றி என்பது நாம் நினைத்த மாத்திரத்தில் கிடைத்துவிடும் ஒன்றல்ல. திட்டமிட்டுச் செயற்பட்டு வந்தால்தான் வெற்றியும் கிட்டும்.

–Dr.ஷூல்லர்–

ஒரு நாட்டின் மிகுந்த விலை மதிப்புப் பெற்ற செல்வம் எது என்றால், ஆரோக்கியத்துடனும் சத்தோஷத்துடனும் வாழும் மக்கள்தான்.

–ஸஸ்கின்–

ஔவையார்

இவ்வளவு காலமும் அதியமான் கால ஔவையார் பற்றி அறிந்து கொண்டீர்கள். இந்த இதழில் இருந்து கம்பர் கால ஔவையாரைப் பற்றி அறிந்து கொள்வோம். கம்பர்கால ஔவையார் தென்னிந்தியாவில் சோழர் ஆண்ட காலத்தில் வாழ்ந்தவர். இவர் முன்பு வாழ்ந்த ஔவையாரைப் போலவே, தமிழுக்கும் தமிழ் மக்களுக்கும் உதவி செய்து வந்தபடியால் இவரையும் "ஔவையார்" என்றே மக்கள் அழைத்திருக்கிறார்கள

கம்பர் கால ஔவையாரின் பாடல்கள் மிகவும் இலகுவாக யாருக்கும் புரியும். ஒருமுறை ஔவையார் அரசன் ஒருவரைப் புகழ்ந்து பாடினார். அரசன் மகிழ்ந்து ஔவையாரைப் பாராட்டினான். அதேவேளை வேறொரு புலவர் தன்னோடு சிறு குழுவையும் கூட்டி வந்தார். வந்த புலவரோ அரசனின் மனைவியைப் பற்றிப் புகழ்ந்து பாடினார். அவர்

பாடும்போது கூடவந்திருந்தவர்கள் ஆகா! ஓகோ! என்று புகழ்ந்து கொண்டார்கள்.

ஆனால் பாடலில் எந்தவிதமான நயமோ சுவையோ இருக்கவில்லை. அரசன் அப்புலவனது பாடலையும் அருமையான பாடலென்று பாராட்டினான். ஔவையாருக்கு மிகவும் வெறுப்பாகப் போய்விட்டது. உடனே ஔவையார் "புலவனோடு கூடவருபவர்கள்

புகழ்ந்து கொள்ள வேண்டும். அவர் விரல்களில் மோதிரங்கள் மின்ன வேண்டும். அவர் உயர்ந்தரகப் பருத்தியாடையோ அல்லது பட்டாடையோ அணிந்திருக்க வேண்டும். அப்படியானவர்கள் வந்து பாடல்களைப் பாடினால், அந்தப்பாடல் எவ்வளவு தரமில்லாத பாடலாக இருந்தாலும் நல்லபாடலாகத் தான் இருக்கும்" என்று கருத்துப்பட

விரகர் இருவர் புகழ்ந்திட வேண்டும்
விரல்தனில் மோதிரங்கள் வேண்டும்–அரையதனில்
பஞ்சேனும் பட்டேனும் வேண்டும்–அவர் கவிதை
நஞ்சேனும் வேம்பேனும் நன்று.

என்று வெறுப்போடு பாடினார்.

இலகுவான தன்மையில் ஔவையாரின் பாடல்கள் இருந்தமையால் படித்தவர்கள் மட்டுமல்லாமல் பாமர மக்களும் அவரின் பாடல்களை விரும்பினார்கள். ஔவை பசியென்று கேட்காமலே செல்லுமிடங்களில் எல்லாம் மக்கள் வரவேற்று உபசரித்தார்கள்

–தொடரும்.–

வினாவிடைப் போட்டி முடிவு

1. தாவரத்தை உண்ணும் மிருகங்களில் மூர்க்கமாகத் தாக்கும் மிருகம் எது?

காகம். மாண்பு. வேண்டாம். அம்மி. எருமை. சுகம். கம்பி (காண்டாமிருகம்)

2. உலகத்திலேயே இந்து மதத்தவர் மட்டும் வாழும் நாடு எது?

நேரம். அப்பா. சோளம். கரும்பு (நேபாளம்)

3. முஸ்லீம் நாடுகளில் மிகப் பெரிய நாடு எது?

இலக்கம். ஆந்தை. சந்தோஷம். பின்னேரம். மகரிஷி. யாசகம். (இந்தோனேஷியா)

4. முட்டையிட்டவுடன் இறந்துவிடும் பூச்சி எது?

பச்சோந்தி. சட்டை. தட்டு. கறுப்பு. பூனை. அச்சம். பயிற்சி (பட்டுப்பூச்சி)

5. மகாத்மா காந்தியின் உருவப்படத்தை தபால் முத்திரையில் முதலில் வெளியிட்ட நாடு எது?

ஐயம். பக்கம். சங்கீதி. சமயம். அறம். மௌனம். பரிவு. துக்கம். காசு (ஐக்கிய அமெரிக்கா)

எழுதியவர்கள்:

அஜந்தன் அருளானந்தசிவம்	Remscheid
அகல்யா அருளானந்தசிவம்	Remscheid
நிசாந் சிவஞானம்	Bremervörde
ஜெனி அருள்	St.Wendel
ஜொனி அருள்	St.Wendel
ஜெயஷாந் மனோறஞ்சிதராசா	Münster
கிரிசாந் மனோறஞ்சிதராசா	Münster
மோகன் இரத்தினசபாபதி	Eschelbronn
ஜெயதீபா இரத்தினசபாபதி	Eschelbronn
ரோனி தேவதாஸ்	Jüchen
ரெறன்ஸ் தேவதாஸ்	Jüchen
கௌரியன் சிவானந்தராஜா	Elsdorf
மஞ்சுளா சிவசம்பு	Lohmar
கௌரியன் குலேந்திரன்	Düsseldof
சோபிகா சிவராஜா	Grevenbroich
தி. நிஷாந்தி	Svendborg (Denemark)
அனுஷா சிவா	Hagen
சிவதர்சினி சிவராஜா	Duisburg
சிவாஸ்கர் சிவராஜா	Duisburg
கரேகா கமலநாதன்	Wedemark
முகுந்தன் மகேந்திரன்	Berg.Gladbach
உமையாள் விக்னேஸ்வரன்	Hiddenhausen
கிருஸ்ணயோதி விக்னேஸ்வரன்	Hiddenhausen
செந்தூரன் கமலேஸ்வரன்	Gelsenkirchen
சிவகுமார் சிவகப்பிரமணியம்	Selm
வித்தியா சிவகப்பிரமணியம்	Selm
கோகுலசக்தி செல்வராஜா	Solingn
சிவா செல்வராஜா	Solingn
தர்சிகா செல்வராஜா	Solingn

முல்லாகதைகள்

முல்லா வீட்டுக்கு வெளியே இருந்து ஒரு புத்தகம் படித்துக் கொண்டிருந்தார். சிறுவர்கள் சிலர் முல்லாவின் வீட்டின் முன் விளையாடிக் கொண்டிருந்தனர். ஒரே சத்தம்! அச் சத்தத்தினால் முல்லா படிக்க முடியவில்லை.

சிறுவர்களிடம் சத்தம் போடாதீர்கள் என்றால், கேட்கமாட்டார்கள். வேறு ஏதாவதுதான் செய்யவேண்டும், என யோசித்த முல்லாவிற்கு ஒரு யோசனை தோன்றியது. அதன்படியே சிறுவர்களிடம், மூன்றாவது தெருவில் இருப்பவர், இன்று ஒரு விருந்து வைக்கிறாராம், நீங்கள் போகவில்லையா? என்று வினவினார்.

விருந்து என்றதும், சிறுவர்கள் எல்லோரும் முன்றாவது தெருவிற்கு ஓடி விட்டனர். முல்லா சிறுவர்கள் ஓடிய காட்சியைப் பார்த்தார். உடனே தானும் தனது சால்வையைப் போர்த்திக் கொண்டு அவசர அவசரமாக வெளிக்கிட்டார். இதைப் பார்த்த முல்லாவின் மனைவி, முல்லா எங்கே போகிறார் என்று விசாரித்தார். அதற்கு முல்லா நான் எது சொன்னாலும் பலித்து விடும் என்பார்கள், சிறுவர்களிடம் விருந்து என்று சொன்னேன். விருந்கு கிடைத்தால் நன்று அல்லவா? அதுதான் வெளிக்கிடுகிறேன், என்றார்.

B.B.C தொலைக்காட்சிச் சேவை முதன்முதலாக 1929ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. தொலைக்காட்சி கண்டு பிடிக்கப்பட்டு, மூன்றாண்டுக்குள்ளேயே B.B.C தன் சேவையைத் தொடங்கி விட்டது.

சீனாவில் சிங்கியாவ் என்னுமிடத்தில் இயற்கையாகவே அமைந்த பாலம் இருக்கிறது. இயற்கைப் பாலங்களில் மிகவும் உயரமானது. 312 மீற்றர் உயரமும் 45மீற்றர் நீளமும் கொண்டது.

. சிறந்தவர் .

கமலா: என்ன, என்ன அதோ
சப்தம் கேட்குதே! – அட,
எங்கள் வீட்டுத் தோட்டத்திலே
சப்தம் கேட்குதே!
சென்று நாமும் பார்த்து வரலாம்
வருவாய் தோழியே – என்ன
செய்தி என்றே அறிந்து வரலாம்
வருவாய் தோழியே!

விமலா: மல்லிகைப்பூ அதோ, அதோ
சிரித்து வருகுது!
வாய்திறந்து ஏதோ வார்த்தை
சொல்ல வருகுது!

மல்லிகை: மல்லிகைப்பூ என்றவுடனே
மணமணக்குமே
மக்களுடைய உள்ளமெல்லாம்
மயங்கி நிற்குமே
உள்ளம் குளிரப் பெண்கள் தலையில்
என்னை அணிவரே
உருவம் சிறிதே ஆனபோதும்
உயர்ந்தவள் நானே!
முத்து வடிவம் கொண்ட என்றன்
உடலைப் பாருங்கள்.
வெள்ளை உள்ளம் போன்ற என்றன்
நிறத்தைப் பாருங்கள்.
இத்தலத்தில் மலர்களுக்குள்
சிறப்பு மிக்கவள்
என்னைப் போல ஒருத்தி உண்டோ?
இல்லை, இல்லையே!

கமலா: குவிந்திருக்கும் தாமரைப்பூ
அதோ வருகுது!
கோபுரத்துக் கலசம் போல
அதோ வருகுது!

தாமரை: சின்னப் பூவே மல்லிகை,
என்ன பேச்சுப் பேசினாய்?
என்னைப் போல ஒருத்தியை
எனக்குமிப் பார்க்கவில்லையோ?
தண்ணீர் மேலே நிற்பவள்
தட்டைப் போல விரிபவள்
கதிரவனுக் கினிதாய்த் தெரிபவள்
கடவுள் பூசைக் குரியவள்
சிறப்பு மிக்கக் கலைமகள்
செல்வம் நல்கும் திருமகள்
இருவர் என்மேல் இருப்பதும்
என்மேல் உமக்கோ சொல்லுமே?

விமலா: தங்க நிறத்து அரளி அதோ
குலுங்கி வருகுது!
சண்டை போடத்தானோ அதுவும்
நெருங்கி வருகுதே?

அரளி: மல்லிகையே! தாமரையே!
என்ன சொன்னீர்கள்?
மனிதருக்கே நீங்கள் உதவும்
கதையைச் சொன்னீர்கள்
எல்லாம் வல்ல இறைவழுக்குப்
பூசை செய்யவே,
இந்த உலகில் நான் பிறந்தேன்,
தெரிந்து கொள்ளுங்கள்.
அங்கம் முழுதும் மருந்தாம் பூரி

நிற்கும் என்னையே
தங்க அரளி என்றே மக்கள்
புகழ்ந்து கூறுவார்.
இங்கே உள்ள மலர்களுக்குள்
நானே சிறந்தவள்!
எதிர்த்துப் பேச எவருக்கேனும்
துணிச்சல் உண்டோடி?

கமலா: அதோ அந்தச் சாமந்தியும்
அருகில் வருகுதே!
அதுவும் இந்தச் சண்டையிலே
குதிக்கப் போகுதோ?

சாமந்தி: மல்லிகை, தாமரை, தங்கரளி—உங்கள்
மகிமையைக் கேட்டுச் சலித்து விட்டென்.
இல்லாத நில்லாத பெருமையெல்லாம்—நீங்கள்
ஏனோதான் பேசி மகிழுகின்றீர்?

தங்கம் போல் நானும் நிறமுடையேன்—ஈசன்
தலையிலும் கழுத்திலும் விளங்கிடுவேன்
மங்கள காரியம் யாவினிலுமே—என்னை
மக்கள் மறப்பதே இல்லையடி.

ஓரிரு நாள்களே வாழுகின்றீர்—நீங்கள்
உடலெல்லாம் வாடி வதங்குகின்றீர்.
ஆறேழு நாள்களே ஆயிடினும்—மணம்
பரப்புவேன் நான், அறிவீர்.

என்னை விரும்பி அணிந்திடுவார்—மிக்க
ஏழை எளியவர் யாவருமே.
பொன்னொளி வீசிடும் என்னை விட
பூக்களில் சிறந்தவள் யாரடியோ?

விமலா: ஆகா! ஆகா! அதோ பார்.
அழகு ரோஜா மலரைப் பார்!
வேகமில்லை, கோபமில்லை,
மெல்ல மெல்ல வருகுது பார்!
மலர்களுக்குள் அரசியாய்,
மணம் பரப்பும் மலர் இது
உலகம் முழுதும் போற்றிடும்
உயர்ந்த ஜாதி மலரிது!

கமலா: பட்டுப் போன்ற மலர் இது
பையப் பைய வருகுது
தொட்டுப் பார்க்கும் ஆசையைத்
தூண்டுகின்ற மலரிது
தெய்வத்திற்குச் சூட்டலாம்
திருமணத்தில் அணியலாம்
கையில் ஏந்தி நடக்கலாம்,
களிப்பை ஊட்டும் மலரிது.

விமலா: நேருவுக்குப் பிடித்தது,
நெஞ்சமெல்லாம் கவர்ந்தது,
பாரில் இதைப் போலவே
பார்த்ததுண்டோ ஒரு மலர்?

கமலா: இல்லை, இல்லை ரோஜாவும்
ஏதோ பேசப் போகுதே!

விமலா: நல்லதைத்தான் பேசிடும்
நாமும் அதைக் கேட்கலாம்.

ரோஜா: அருமைப் பூவே, மல்லிகையே!
அழகுப் பூவே, தாமரையே!
பெருமைபூட்டும் தங்கரளி!
பிரியமான சாமந்தியே!

உங்களின் கண்டை பார்த்ததுமே – என்
உள்ளம்மிகமிக வாடியதே.
இங்குள்ள நாமெல்லாம் ஓரினமே – இதை
ஏனோ மறந்தீர் தோழியரே?

வண்ணத்தில் வேற்றுமை இருந்திடினும் – நம்
வடிவத்தில் வேற்றுமை இருந்திடினும்
எண்ணத்தில் வேற்றுமை இல்லாமல் – நாம்
இணைந்து வாழுவோம் ஒற்றுமையாய்.

கண்டவர் உள்ளம் கவர்ந்திடவே – நல்ல
காட்சி அளித்து விளங்குகின்றோம்
வண்டுகள் வயிறார உண்டிடவே – நாம்
வாரித் தேனை வழங்குகின்றோம்

திருவிழா, திருமணம், பண்டிகைகள் – எல்லாம்
சிறந்திட நாமும் உதவிடுவோம்.
தறுமணம் எங்கும் பரப்பிடுவோம் – என்றும்
நன்மைகள் செய்யவே நாம் பிறந்தோம்.

என்னை விரும்பி அணியவராம் – நேரு
இந்திய நாட்டின் கடர்மணியாம்!
சண்டை விரும்பா உத்தமராம் – அவர்
சாந்த வழியிலே சென்றவராம்.

சாந்த வழியில் சென்றவராம் – அந்தத்
தங்கத் தலைவரின் சொற்படியாம்
சாந்த வழியில் சென்றிடுவோம் – என்றும்
சாந்த வழியில் சென்றிடுவோம்

பூக்கள்: சாந்த வழியில் சென்றிடுவோம் – நாம்
சாந்த வழியில் சென்றிடுவோம்.

கமலாவும் விமலாவும்: சாந்த வழியிலே சென்றிடுவோம் – நாமும்
சாந்த வழியில் சென்றிடுவோம்.

– அழ. வள்ளியப்பா –

தபால் மூலம் கடிதங்கள் அனுப்பும் முறையை பதினாறாம் நூற்றாண்டிலேயே அறிமுகப் படுத்திய பெருமை ஆஸ்திரியாவைச் சேரும்.

கங்காரு மட்டும்தான் தன் வாலை கை, கால் போன்று பயன் படுத்திக் கொள்கிறது. கங்காரு தாவும்போது அதன் வாலும் ஒருகால் போல எம்பிக் குதித்து தாவியோட உதவுகிறது. கங்காரு பத்து அடி உயரத்துக்கு மேல் தாவிச் செல்லும் திறனுடையது.

ஏற்பது இகழ்ச்சி

முருகையா என்று ஒரு பெரியவர் இருந்தார். அந்த ஊரில் பெரிய தொழிற்சாலை ஒன்றை நிறுவி, அந்த ஊர் மக்களுக்கு வேலை கொடுத்தார். யாருமே சோம்பேறிகளாக இருந்து, வேலை செய்யாமல் கையேந்திப் பிழைப்பது அவருக்குப் பிடிக்காது. எனவே, "ஏற்பது இகழ்ச்சி" என்னும் பெரியோர் வாக்கைத் தனது நினைவில் கொண்டு வாழ்ந்து வந்தார். மற்றவர்களுக்கும் அதையே சொல்லிக் கொள்வார்.

அவரை அந்த ஊர் மக்கள் "ஐயா" என்று அன்புடன் அழைப்பார்கள். அவரால் வாழ்க்கையில் முன்னேறியவர்கள் பலர். அவரைத் தெய்வம் போலவே ஊர் மக்கள் மதித்தனர். ஒருமுறை அவரது தொழிற்சாலைக்கு வரவேண்டிய மூலப்பொருட்கள் வராததால், தொழிற்சாலையை மூட வேண்டிய நிலை ஏற்பட்டது. இதனால் முருகையா தொழிற்சாலையை வேறொருவருக்கு விற்று விட்டார்.

விற்ற பணத்தை தொழிற்சாலையில் வேலை செய்த தனது ஊழியர்களுக்கு பகிர்ந்து கொடுத்து "புதிய வேலை ஒன்றைத் தேடும்வரை குடும்பத்துக்கான நிதி உதவியாக இதை வைத்துக் கொள்ளுங்கள்" என்றார். தொழிலாளர்கள் அவர்மீது கொண்ட அன்பால் தாங்கள் பெற்றுக் கொண்ட பணத்தின் ஒரு பகுதியை முதலாளியான முருகையாவையே பெற்றுக் கொள்ளுமாறு வேண்டினர். முருகையாவோ மறுத்து விட்டார்.

அதன்பின் வேலை செய்த ஊழியர்கள் தாங்களே ஒவ்வொரு வேலையைத் தேடிக் கொண்டனர். சிலகாலம் சென்றது. அவர் தொழிற்சாலையில் வேலை பார்த்த கணேசன் என்பவன் கனடாவுக்கு முருகையா வந்தார். கணேசனும் அவரை

மரியாதையாக வரவேற்றான். அவனிடம் தான் கொண்டு வந்த காய்கறிக்கூடையைக் கொடுத்து "கணேசா,, இந்தக் காய்கள் என் தோட்டத்தில் விளைந்தவை. இவற்றை விற்றுத்தர முடியுமா? என்று கேட்டார்.

நீங்கள் வாழ்ந்த வாழ்க்கை என்ன முதலாளி! நீங்கள் ஏன் கஷ்டப் படுகிறீர்கள். இப்போ செல்லுங்கள். தொழிற்சாலையில் வேலை பார்த்த எல்லோரும் நன்றாக இருக்கிறோம். எல்லோருமாகச் சேர்ந்து உங்களை வாழ வைக்கிறோம்" என்று பணிவோடு கேட்டான். முருகையா அவனைப் பார்த்துச் சொன்னார். "உங்களைப் போன்ற தொழிலாளர்களால் தான் தொழிற்சாலையை நடத்தினேன். அந்தப் பணம் உங்களுடைய பணம். அதனால்தான் அதைப் பகிர்ந்து கொடுத்தேன். இரண்டு கைகளையும் ஆண்டவன் கொடுத்திருக்கிறான். அவைகளின் உதவியால் என் குடும்பத்தைக் காப்பாற்றுகிறேன். "ஏற்பது இகழ்ச்சி" என்று பெரியோர்கள் சொல்லியதை நாம் மறக்கலாமா!

புத்தகங்கள் உயிருள்ளவை அல்ல. ஆனாலும் அவை என்றும் வாழ்ந்து கொண்டிருப்பவை

வி.பென்னட்

ஆனியும் அப்பாவும்

ஆனி பணக்கார வீட்டுப்பெண். அவளுடைய அப்பா அவளுக்காக வர்ணப்பட்டுச்சட்டை விதவிதமான ஆபரணங்கள் வாங்கிக் கொடுப்பார். விளையாட்டுப் பொம்மைகள் வாங்கிக் கொடுப்பார். வீட்டில் அரள் வைத்தது தான் சட்டம். அவள் ஒரு அரசியைப் போல வாழ்ந்து வந்தாள். ஒருநாள் அவள் அப்பா வேலையாட்களோடு வேட்டைக்குச் செல்ல எண்ணினார். ஆனி தன்னையும் அழைத்துச் செல்ல வேண்டும் என்று பிடிவாதம் பிடித்தாள்.

ஆனியின் பிடிவாதம் தான் அப்பாவுக்குத் தெரியுமே. எவ்வளவோ சமாதானம் சொல்லியும் முடியாததால், ஆனியையும் அழைத்துக் கொண்டு வேட்டைக்குச்

சென்றார். அவளை ஒரு பூக்தோட்டத்தினுள் விட்டுச் சென்றார். ஆனிக்குப் பூக்கள் என்றால் நல்ல விருப்பம். தான் புறப்படும்போது தனது சிறிய கைக்கூடையையும் ஆனி கொண்டு வந்திருந்தாள். சின்னச் சின்ன மரங்களில் இருந்து அழகான பூக்களையெல்லாம் பறித்துக் கூடைக்குள் வைத்துக் கொண்டாள்.

பூக்களைப் பறித்துக் கொண்டே, அப்பா விட்டுச் சென்ற இடத்தை விட்டு வெகுதூரம் சென்று விட்டாள். ஆனியின் பூக்கூடையும் நிரம்பி விட்டது. திரும்பி அப்பா விட்டுச் சென்ற இடத்துக்குச் செல்ல அவளால் முடியவில்லை. தேம்பித் தேம்பி "அப்பா அப்பா" என்று அழத் தொடங்கினாள். மாலை நேரமும் வந்து விட்டது. அப்பாதான் அவளைக் காணாமல் அழுவாரே?. அப்பாவை நினைத்ததும் அழுகை பெரிதாகியது. அழுதவாறே ஒரு மரத்தின் கீழே இருந்தாள்.

அவள் தோள் மீது யாரோ கை வைப்பது போலத் தோன்றியது. திரும்பிப் பார்த்தாள். "என் பெயர் பீற்றர். அழாதே, அருகில் எங்கள் வீடு இருக்கிறது. இரவு என் வீட்டில் இரு. விடிந்ததும் உன் அப்பாவிடம் போகலாம்" என்று ஒரு சிறுவன் கூறினான். ஆனி அவனைப் பார்த்தான். அழுக்குச் சட்டை அணிந்திருந்தான். தலையெல்லாம் கலைந்திருந்தது.

அவனைப் பார்க்க ஆனிக்குப் பிடிக்கவில்லை. அழுக்குப் பையனாக இருக்கின்றானே. ஆனாலும் அவனுடன் செல்ல வேண்டியிருந்தது. இருட்டாகிவிடுமே! இருட்டென்றால் ஆனிக்குப் பயம். அதனால் பீற்றருடன் சென்றாள்.

பீற்றரின் வீடு சிறிதாக இருந்தது. அவன் தன் அம்மாவுக்கு ஆனியை அறிமுகப்படுத்தினான். ஆனியை அன்புடன் உபசரித்தாள். அவள் உண்பதற்குப் பாணும் அப்பிள் பழமும் கொடுத்தாள். ஆனிக்கு நித்திரை வந்தது. பஞ்சுமெத்தையில் படுத்த அவளுக்கு, மரத்தால் செய்த கட்டிலில் நித்திரை வரவில்லை. ஆனிக்கு மீண்டும் அழுகை வந்தது. பீற்றரின் அம்மா அவளுக்கும் பீற்றருக்கும் கதை சொன்னாள். ஆனி கேட்டுக் கொண்டே நித்திரையாகி விட்டாள்.

அவளுடைய பெரிய வீட்டில் எல்லாமே இருந்தது. "அன்பாகக் கதை சொல்ல யாரும் இல்லை. விளையாட ஒரு தோழன் இல்லை. அப்பாவிடம் சொல்லி பீற்றரையும் அம்மாவையும் எங்கள் வீட்டில் வைத்திருக்க வேண்டும்." விடிந்ததும் பீற்றரிடம் இதைப் பற்றிக் கேட்டாள். பீற்றர் சொன்னான்: நாங்கள் ஏழைகள். உங்கள் வீட்டிற்கு எப்படி வரலாம்" . அப்பாவிடம் கேட்டு எப்படியாவது இருவரையும் எங்கள் வீட்டில் வைத்துக் கொள்ள வேண்டும்.

பீற்றரோடு சேர்ந்து விளையாடலாம். அம்மாதான் இரவில் கதை சொல்வாளே!.

ஆனி வெளியே வந்து பார்த்தாள். பீற்றரின் அம்மா அவளுக்குப் பாலும் பாணும் கொடுத்தாள். பீற்றர் விறகு உடைத்துக் கொண்டிருந்தான். தூரத்தில் குதிரையின் காலடிச் சத்தம் கேட்டது. சத்தம் சமீபத்தில் கேட்கவே, ஆனி நிமிர்ந்து பார்த்தாள். அப்பாதான் வந்து கொண்டிருந்தார். ஓடிப் போய் அப்பாவைக் கட்டி அணைத்துக் கொண்டாள். அப்பா அவளின் கன்னத்தில் முத்தமிட்டார். பின் பீற்றருக்கும் அவனுடைய அம்மாவுக்கும் நன்றி கூறிவிட்டு ஆனியை அழைத்துச் சென்றார்.

வீட்டுக்கு வந்த ஆனி அப்பாவிடம் நடந்ததைக் கூறினாள். "அப்பா, பீற்றரின் அம்மா நல்ல நல்ல கதைகள் சொல்லுவார். பாடல்கள் சொல்லித் தருவார். பீற்றரோடு விளையாடலாம். அவர்களை எங்கள் வீட்டில் அழைத்து வைத்துக் கொள்ளலாம்" கெஞ்சினாள் ஆனி. அவளின் ஆசைகளைத் தான் அப்பா நிறைவேற்றுபவராயிற்றே. பீற்றரும் அம்மாவும் ஆனியின் வீட்டுக்கே வந்து விட்டனர். இனியென்ன, ஆனிக்குக் கொண்டாட்டம் தான். பீற்றரோடு விளையாடலாம். தினம் தினம் அம்மாவிடம் கதைகள் கேட்கலாம்.

சார்லி சாப்ளின்

சார்லி ஆனந்தப்பட்ட அதேவேளையில் வேறு விதமாகவும சிந்தித்தார். ஆயிரத்து இருநூற்றி ஐம்பது டொலர்கள் மட்டுமே வாங்கிக் கொண்டு கதையெழுதி, திரைக்கதையாக்கி இயக்கி அதுவுமல்லாமல் நடித்துக் கொடுக்க எஸ்ஸென்னே நிறுவனத்தினர் இலகுவாக ஒரு படத்திற்கு நூறாயிரம் டொலர் வாங்குகிறார்களே! இனிமேல் விரைவாகப் படத்தை முடித்துக் கொடுக்காமல் தாமதமாகவே முடித்துக் கொடுக்க வேண்டும் என்று முடிவு செய்தார்.

சார்லி தாமதமாகவே செயற்படுவதை படநிறுவனத்தினரும் புரிந்து கொண்டார்கள். ஸ்பூர் சிக்காகோவிருந்து உடனடியாக லாஸ்ஏஞ்சலசுக்கு வந்தார். சார்லியை அழைத்து உடனடியாகவே சமரசம் செய்யத் தொடங்கினார். அவரது அவசரமான வருகையும் சமரசப் பேச்சும் சார்லிக்கு பெரிதும் தன்னம்பிக்கையையும் பரவசத்தையும் கொடுத்தது. ஸ்பூர் சார்லியோடு புதிய ஒப்பந்தமொன்றைச் செய்து கொண்டார்.

ஒவ்வொரு படத்துக்குப் பத்தாயிரம் டொலர் முன்பணமாகக் கொடுக்க நிறுவனம் ஒப்புக் கொண்டது. சார்லியின் மகிழ்ச்சி எல்லை கடந்தது. "கார்மான்" என்ற படமொன்றைச் சார்லி தொடக்கினார். நான்கு சுருள் படமாக இருந்ததால் படத்தை முடிக்க கூடுதலான நாட்கள் எடுத்தன. இதற்கிடையே நியூயோர்க்குச் சிட்னியிடம் போய்வர எண்ணினார்.

ஒருநாள் படவேலையை முடித்து விட்டு அங்கிருந்தே சிட்னியிடம் புறப்பட்டார். முன்பே சிட்னிக்குத் வருவதாகத் தந்தி கொடுத்திருந்தார். சார்லி நியூயோர்க்குக்கு வருவதை திரைப்பட இரசிகர்கள் அறிந்து விட்டனர். ஒவ்வொரு புகைவண்டித் தரிப்பு நிலையங்களிலும் பலமான வரவேற்பு சார்லிக்குக் கிடைத்தது. சாதாரணமாவே நியூயோர்க்குக் செல்ல ஐந்து நாட்கள் பிடிக்கும். சார்லியின் வருகை காரணமாக மேலும் தாமதமாகவே புகைவண்டி சென்றது. தான் நட்சத்திர அந்தஸ்தைப் பெற்று விட்டதைச் சார்லி உணர்ந்து கொண்டார். அவர் மனம் ஆனந்தத்தால் குதூகலித்தது.

–தொடரும்–

முல்லா கதைகள்

ஒருமுறை முல்லாவும் அவரது நண்பரும் கடை ஒன்றிற்குச் சென்றனர். இருவருக்கும் தாகம் எடுத்தது. அவர்களிடம் ஒரே ஒரு குவளைதான் இருந்தது, ஆகவே இருவரும் அரைக் குவளைகளுக்கான பணங்களைக் கடைக்காரரிடம் குடுத்தனர். கடைக்காரரும் ஒரு குவளை நிறையப் பால் குடுத்தார்.

முல்லாவின் நண்பர் முல்லாவை முதலில் அரைப் பாலைக் குடிக்கச் சொன்னார். ஏன்?, என்றார் முல்லா. தான் சற்றுச் சீனீ வைத்திருப்பதாகவும் முல்லா அரைப் பாலைக் குடித்தவுடன் மிச்சம் இருக்கும் அரைப்பாலில்

அச் சீனீயைப் போட இருப்பதாகவும் சொன்னார் முல்லாவின் நண்பர்.

முல்லாவிற்கு நண்பரின் சுயநலம் புரிந்தது. ஆகவே உடனேயே தன்னிடம் இருந்த உப்பைப் பாலில் போட்டுப் பாதியைக் குடித்தார். பின்பு அதைத் தமது நண்பரிடம் குடுத்தார். நண்பர் தலையில் அடித்துக் கொண்டார்.

நான் என் இலட்சியத்தில் வெற்றி பெறுவேன் என்னும் எண்ணத்தைத் அடிக்கடி எழுதி வாருங்கள் அல்லது மனதில் நினைத்துக் கொள்ளுங்கள். மனதில் நன்றாகப் பதிந்ததும் இயற்கையான செயற்பாடு உங்களை வெற்றி கொள்ள வைக்கும்.

–காவெய்ன்–

எந்நேரமும் பணிவுடன் நடந்து கொள்ளுங்கள். எல்லோரையும் சிறப்பான மனிதர்கள் என்றே எண்ணிக் கொள்ளுங்கள். இப்படியான தன்மையில் வாழ்ந்தால் நிச்சயம் நீங்கள் நல்லவராகி வருவதை உணர்ந்து கொள்வீர்கள்.

–ஸ்வாப்ட்ஸ்–

வாழ்க்கை ஒருவருக்குச் சொந்தமான நூல் நிலையம்.

–ஹேமி எமர்ஸன்–

சொற்களைக் கண்டு பிடியுங்கள் முடிவு

இ – வ

குழந்தை
அரம்
சிக்கல்
கல்
வரி
கன்னம்
அலை
இன்பம்
ஓவியம்
தரை
இதயம்
கூனி
திராட்சை
ச
சிறப்பு
புயல்
கரை
கரி
வேலி
தரம்
கம்
மால்

வ – இ

சிந்தை
குற்றம்
சாம்பல்
பல்
பாரி
சமம்
கொலை
நிரை
தங்கம்
கம்
ஓசை
வண்ணி
கூரை
செவி
புரி
கரை
வாலி
புதை
புதையல்
தையல்
மாதம்

மே – கீ

அதி
அசை
பதி
பரி
பரிசு
வலை
இராகம்
கரம்
சிரி
கரை
புலி
வால்
மரை
செம்பு

கீ – மே

பதி
பசை
அதி
ஓலை
வரம்
மரை
கசை

பாசி
இயக்கு
பகல்
புனிதம்
தம்
பதை
மனம்

எல்லாப் பக்ககத்தாலும் வரும் சொற்கள்
சா, பா, மா. தை

எழுதியவர்கள்:

அஜந்தன் அருளானந்தசிவம்	Remscheid
ஜெயதீபா இரத்தினசபாபதி	Eschelbronn
மோகன் இரத்தினசபாபதி	Eschelbronn
ரெனி அருள்	St.Wendel
கிரிசாந் மனோரஞ்சிதராஜா	Münster
சுரேகா கமலநாதன்	Wedemark
தர்சிகா செல்வராஜா	Solingen
சிவா செல்வராஜா	Solingen
கோகுலசக்தி செல்வராஜா	Solingen
மஞ்சுளா சிவசம்பு	Lohmar
சோபிகா சிவராஜா	Grevenbroich
கௌரியன் குலேந்திரன்	Düsseldorf
ஜொனி அருள்	St.Wendel
தி. நிஷாந்தி	Svendborg (Denemark)
சிவதர்சினி சிவராஜா	Duisburg
சிவாஸ்கர் சிவராஜா	Duisburg
சுஜீவன் சண்முகலிங்கம்	Clausthal
சுஜீனா சண்முகலிங்கம்	Clausthal
ரெறன்ஸ் தேவதாஸ்	Jüchen
ரொனி தேவதாஸ்	Jüchen
முகுந்தன் மகேந்திரன்	Berg.Gladbach
கௌரியன் சிவானந்தராஜா	Elsdorf
ஷர்மிளா கமலேஸ்வரன்	Gelsenkirchen
சிவகுமார் சிவசுப்பிரமணியம்	Selm
உமையாள் விக்னேஸ்வரன்	Hiddenhausen
கிருஸ்ணஜோதி விக்னேஸ்வரன்	Hiddenhausen

நீங்கள் எங்களுக்கு விடைகளை அனுப்பும் போது ஒவ்வொரு ஒற்றையிலும் உங்களது பெயரும் விலாசமும் தெளிவாக எழுதி அனுப்பினால்தான் நாங்கள் உங்களது பெயரைப் பத்திரிகையில் பிரசுரிக்கமுடியும்.

ஆதவன் மாமா எழுதுகின்றேன்

இம்முறை உங்களுக்கு "READER'S DIGEST" என்ற ஆங்கிலச் சஞ்சிகையிலிருந்து பெற்றுக் கொண்ட ஒரு கணக்குத் தருகிறேன். இதிலிருந்து ஒருவரின் வயதையும் பிறந்தமாதத்தையும் நீங்கள் கண்டு பிடிக்கலாம்.

நீங்கள் ஒருவரிடம் அவர் பிறந்த மாதத்தை இரண்டால் பெருக்கும் படி கூறுங்கள். வந்த இலக்கத்துடன் ஐந்தைக் கூட்டச் சொல்லுங்கள். வந்த விடையை 50ஆல் பெருக்கச் சொல்லுங்கள். அதனுடன் அவரது தற்போதைய வயதையும் கூட்டச் சொல்லுங்கள். வந்த முழுத்தொகையிலிருந்தும் 365 ஐக் கழிக்கச் சொல்லுங்கள். பின், வந்த விடையை உங்களுக்குச் சொல்லும்படி கேளுங்கள். அவர் தந்த விடையுடன் நீங்கள் இரகசியமாக 115ஐக் கூட்டுங்கள். இப்பொழுது உங்களுக்குக் கிடைத்த இலக்கத்தில்

இடப் பக்கம் இருப்பது அவர் பிறந்த மாதம், வலப் பக்கத்தில் இருப்பது அவரது வயது.

உதாரணமாக நான் ஐந்தாம் மாதம் 4ந் திகதி 1955ல் பிறந்தேன்.

1. ☞ 1 * 2 = 2
2. ☞ 2 + 5 = 7
3. ☞ 7 * 50 = 350
4. ☞ 350 + 40 = 390
5. ☞ 390 - 365 = 25
6. ☞ 25 + 115 = 140

பெரியவர்களைக் கேட்டு, அவர்கள் வாயைப் பிறக்க வைத்து, இது எப்படி என்று பிரமிக்க வையுங்கள் சிறார்களே!

இப்படிக்கு
ஆதவன் மாமா

ஒருவருக்கு ஒருவேளை உணவு அளிப்பதை விட, அதைத் தானே தேடிக் கொள்ள வழி காட்டுவதே முக்கியம். உதவி செய்வதைவிட, பிறருக்கு உதவி செய்யக் கற்றுக் கொடுப்பதே சிறந்தது.

வில்லியம் ஆஸ்லிட்

பால்மனம் கொண்ட பால்க்காரி

ஒரு பால்க்காரி ஆற்றுக்கு அக்கரையிலே வசித்து வந்த பிராமணகுரு ஒருவருக்குத் தினந்தோறும் பால் கொண்டு போய்க் கொடுப்பது வழக்கம். ஒரு சமயம் படகுப் போக்குவரத்து சரியாக நடைபெறவில்லை. ஆதலால், நாள்தோறும் சரியான நேரத்துக்குப் பால் கொண்டு போய்க் கொடுப்பதில் தடையேற்பட்டது.

ஒரு நாள் அந்தப் பிராமண குரு, "வேளைக்கு ஒழுங்காக ஏன் பால் கொண்டு வந்து தருவதில்லை?" என்று பால்காரியைக் கடுமையாகக் கோபித்துக் கொண்டார். எளிய பால்க்காரியை அவரிடம், "சுவாமி, நான் என்ன செய்வேன்? தினமும் அதிகாலையில்தான் நான் வீட்டை விட்டுக் கிளம்புகின்றேன். ஆனால் நதிக்கரையில் படகு வர நேரம் சென்று விடுகிறது" என்று பதில் கூறினாள்.

அதைக் கேட்டதும் அந்தப் பிராமண குரு "ஏ பெண்ணே! பகவானுடைய நாமத்தை உச்சரிப்பதால் மக்கள் பெரிய கடலையே தாண்டி விடுகிறார்கள்! உன்னால் இந்தச் சிறிய ஆற்றைக் கடக்க முடியவில்லையா?" என்று வினவினார். கள்ளங்

கபடமற்ற பால்க்காரி பிராமணர் சொன்னதை அப்படியே நம்பினாள்.

ஆற்றைக் கடப்பதற்குச் சுலபமான வழி தெரிந்து விட்டது என நினைத்து மகிழ்ந்தாள். வஞ்சம் இல்லாத நெஞ்சம் அவளுக்கு. அடுத்த நாள் முதற்கொண்டு குருவிற்கு உரிய நேரத்திலேலே பால் கிடைத்து வந்தது. ஒருநாள் அவர் பால்காரியிடம் "நீ முன்பு போல் தாமதமாக வருவதில்லையே எப்படி உன்னால் உரிய நேரத்தில் பால் கொண்டு வர முடிகிறது? என்று கேட்டார்.

"சுவாமி, நீங்கள் சொன்னபடி பகவானின் நாமத்தைச் சொல்லிக் கொண்டே ஆற்றைக் கடந்து வருகிறேன். இப்போதெல்லாம் நான் ஓடக்காரனுக்காகக்

காத்திருப்பதில்லை" என்றாள். பிராமணரால் அவள் கூறியதை நம்ப முடியவில்லை. ஆகவே பால்க்காரியிடம் தண்ணீரைத் தாண்டுவதைக் காட்டும்படி கேட்டார். பால்க்காரியும் சம்மதித்தாள்.

ஆற்றுநீரின் மீது சர்வசாதாரணமாக கடவுளின் பெயரைச் சொல்லிக் கொண்டு நடக்கத் தொடங்கினாள். சற்றுத் தூரம் சென்றதும் திரும்பிப் பார்த்தாள். அங்கு அந்தப் பிராமண குரு தண்ணீரில் நடக்க முடியாமல் அவஸ்தைப் பட்டுக் கொண்டிருப்பதைக் கண்டாள். அவரது நிலையைக் கண்டதும் அவள், "சுவாமி! இது என்ன பகவானின் பெயரை வாயால் சொல்கிறீர்கள், ஆனால் அதே சமயம் தூணி எங்கே நழையப் போகிறதோ என்று கைகளால் பிடித்துக் கொள்கிறீர்கள்! உங்களுக்குப் பகவானிடம் பூரணமான நம்பிக்கை இல்லையா?" என்று கேட்டாள்.

பகவானிடத்தில் வைக்கும் தீவிரமான நம்பிக்கையே எல்லா அற்புதச் செயல்களுக்கும் காரணமாக இருக்கின்றன.

வாழ்க்கையில் வெற்றி பெற வேண்டுமென்று கனவு காணுங்கள். வால்ட்டிஸ்னி கண்ட கனவுகளால்தான் தான் வெற்றிக்குரிய சரியான வழியைக் கண்டு கொண்டார்.

Dr.ஷுல்லர்



ஈழம்
எங்கள்
நாடென்போம்!
இதையே
தினமும்
பாடென்போம்!

–சின்ன இராஜேஸ்வரன்–

Siruvar Amutham
Im Winkel-2
50189 Elsdorf
Tel.: 022271/66527
Konto Nr. 1146023746
BLZ 37050299

C.FR[illegible]
APT-2[illegible]
5.RUE D'A[illegible]R
34500 BEZIERS
FRANCE

TELE
6776